
02
April - May 2007

EC Ways (Pvt) Ltd.
No.4, I.B.C. Road, Colombo 6, Sri Lanka.
T.P.: +94 (0) 11 567 3483, Fax: +94 (0) 11 250 6614
Web: www.ecways.com, E-mail: info@ecways.com

FREE ISSUE

# EC LIFE

*Make Life Easy*



## புறக்கோட்டை மனிங் மார்க்கட்

- Budget shop Addresses
- Excel World
- Study at UEL

## கணினிக்கல்வி வழிகாட்டி

## அடையாள அட்டை தொலைந்துவிட்டால்...

- Education Toys
- Share Market
- Mobile Insurance

Making Life Easy through Effective Communication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COLONIAL RANGE OF PRODUCTS

CHS

# COLONIAL

## COLONIAL HARDWARE STORES

Importers, Distributors & General Hardware Merchants.
427, Old Moor Street, Colombo - 12.
Tel : 2431950, 2435414, 2347981 - 83 - 89, 4737394-95, 4737386-87
Hotline : 2387827, 2391792, 2391793
Fax : 2321144, 2334090, 2387826
E-mail : info@colonialhw.com
Web : www.colonialhw.com





## COLONIAL ELECTRICAL EQUIPMENTS

No : 545/B, Sri Sangaraja Mw, Colombo-10.
Tel : 2384594, 2384595
Fax : 2384593
E-mail : colonialelectr@sltnet.lk
Web : www.colonial.lk

- M.S. H Iron
- M.S. Channel Iron
- Angle Iron
- Round Iron
- Flat Iron
- Square Iron
- Tor Steel
- Aluminium Chequered Plate
- Anaband Silicane Sealant

- M.S. / G.I. Sheet
- Aluminium Sheet
- Stainless Steel Sheet
- Stainless Steel Pipes
- M.S. Plate
- M.S. Chequered Plate
- Lip Channel
- Pipe Support Clamp
- Butterfly Clips
- Seamless Pipe



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EC LIFE
Make Life Easy

EC Ways (Pvt) Ltd. No.4, I.B.C. Road, Colombo 6.
Tel: +94 (0) 11 567 3483, Fax: +94 (0) 11 250 6614
Web: www.inllanka.com, E-mail: info@ecways.com

## இணைந்து பயணிப்போம்...

EC Life இன் முதல் வெளியீட்டுக்கு வாசகர்கள் தந்த ஆதரவு பிரமிப்பூட்டுகிறது. நேரிலும், தொலைபேசியிலும், கடிதங்கள் மூலமும் குவிந்த வாழ்த்துக்களும், வரவேற்புக்களும், சந்தா விண்ணப்பங்களும் EC Life இன் இரண்டாவது இதழை வேகமாக வெளிக்கொண்டு வந்துள்ளது.

நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான பெறுமதிவாய்ந்த தகவல்களை, வழிகாட்டல்களை, ஆலோசனைகளைத் திரட்டி அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் இந்த ஊடக முயற்சிக்கு எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே ஆதரவு கிடைத்திருக்கிறது.

முதல் இதழை நாமே, முழுக்க முழுக்க எமது சொந்தப்பலத்தில் வெளியிட்டோம். இவ்வாறான ஒரு வர்த்தக வாழ்க்கை வழிகாட்டி ஊடகத்தின் பலத்தையும், இன்றைய தேவையையும் உணர்ந்து, இதோ, இரண்டாவது இதழிலேயே வர்த்தகர்கள் எம்முடன் இணைந்துள்ளார்கள்.

இந்த ஊடகம் மேலும் சிறக்க உங்கள் பங்களிப்பும் அவசியம். உங்கள் கைசேர்ந்திருக்கின்ற இந்தத் தகவல் பெட்டகத்தை, இது கிடைக்கப்பெறாதவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம், நீங்களும் இந்த முயற்சியில் பங்கெடுக்கலாம்.

எத்தனை பேருக்கு முடியுமோ அத்தனை பேருக்குப் பகிருங்கள்.

நீங்களும், நாங்களும், வர்த்தப் பெருமக்களும் என, எல்லோரும் இணைந்தே பயணிப்போம்.

அன்புடன்,
**Team EC Ways**

*Managing Editor*
**K Rushangan**
*Editor*
**S A Sarmila**
*Graphic Editor*
**K Piratheepan**
*Manager-Information*
**M Pirassath**
*Asst. Manager*
**Praveen T R**
*Marketing Manager*
**R Ranjan Jeffry**
*Web Master*
**K Cheran**
*Web Manager*
**J Ananthan**
*Administrative Manager*
**R Suthagini**

# தகவல் - வழிகாட்டல் - களிப்பூட்டல் எல்லாம் நிறைந்த ஓர் இணைய ஊடகம்

www.INLLanka.com

தகவல், தகவல், தகவல்

இன்று உலகை ஆள்வதே இதுதான். தகவல் தெரிந்தவன் தரணியையே ஆளலாம்.

எந்தவொரு காரியத்தைச் செய்வதாக இருந்தாலும், அதை எப்படிச் செய்யவேண்டும்? எங்கே செய்யலாம்? இதற்கு யாரை நாடவேண்டும் போன்ற தகவல்கள் தெரிந்து விட்டால் காரியத்தை ஈஸியாக முடித்துவிடலாம். எதையும் ஈசியாகச் சாதிக்க ஒரே வழி தகவல்தான். "தகவலே வழி"

இவ்வாறான பலவித தகவல்களையும் பல்வேறு களிப்பூட்டல் அம்சங்களுடன் சேர்த்து ஒரே இடத்தில் வழங்குகிறது INLLanka இணைய ஊடகம்.

இணையப்பரப்பில் உலாவரும் INLLanka (www.inllanka.com), நாளாந்தச் செய்திகள், ஆய்வுக் கட்டுரைகள், கல்வி, வாழ்க்கை வழிகாட்டிக் கட்டுரைகள் என்பவற்றுடன், இன்று தமிழ் இணையப்பரப்பில் வேறெங்கும் இல்லாத பல தனித்துவமான விசேட அம்சங்களையும் கொண்டிருக்கிறது.

### INLLanka News

இலங்கையின் நாளாந்த நிகழ்வுகள், அரசியல் நிலைமைகள் தொடர்பான முக்கியமான செய்திகள், மற்றும் ஆய்வுக் கட்டுரைகளுடன், இந்திய, உலக, வர்த்தக, விளையாட்டுச் செய்திகள் இந்தப் பகுதியில் உள்ளன. சரியாகத் தெரிவுசெய்யப்பட்ட, நம்பகமான, உறுதிப்படுத்தப்பட்ட செய்திகளை வழங்குவதே INLLanka News இன் தனித்துவம்.

### INLLanka Directory

கொழும்பு நகரம், மற்றும் இலங்கையின் பிற பாகங்களில் தங்குமிட வசதிகள் (Accommodation), பஸ், ரயில், விமானம், வாடகைக்கார், முச்சக்கரவண்டிப் போக்குவரத்து வசதிகள் (Travel), விதவிதமான உணவகங்கள்(Restaurants), கொழும்பு நகரில் எமக்குத் தேவையான பல்வேறு பொருள்களையும் பெற்றுக்கொள்ளக்கூடிய வர்த்தக நிலையங்கள், மற்றும் சந்தையில் கிடைப்பன வாகவுள்ள பிந்திய வரவுகள் தொடர்பான தகவல்களை வழங்கும் Colombo Shopping Guide என, பெறுமதிவாய்ந்த ஏராளமான பல தகவல்கள் INLLanka Directory யில் உள்ளன.

### INLLanka Web Search
**தமிழில் தேடுங்கள்**

இணையப்பரப்பில் உங்களுக்குத் தேவையான விடயங்களைத் தமிழிலேயே தேடிப் பெறும் தனித்துவமான வசதி. வேறெந்த இணையத்தளத்திலும் கிடையாத இந்த வசதிமூலம், உங்களுக்கு வேண்டிய விடயங்களை தமிழிலேயே (ஆங்கில எழுத்துக்களில்) தட்டச்சு செய்து இணையப்பரப்பில் தேடலாம்.

### INLLanka Solutions
**கேளுங்கள் கொடுக்கப்படும்**

உங்களுடைய பிரச்சினைகள், தேவையான தகவல்கள், உதவிகள், வழிகாட்டி ஆலோசனைகள் என எது வேண்டுமானாலும், இந்தப் பகுதிக்குச் சென்று தேவையான விடயத்தைத் தட்டச்சு செய்து கேட்டால், உரிய தரப்புக்கள் மூலம் உங்களுக்கான பதில்களை INLLanka குழுவினர் பெற்றுத் தருவர்.

### INLLanka Entertainment
**குடில், சினிமா, MP3 Songs, Blog**

பொழுதுபோக்கு களிப்பூட்டலுக்கென பல பகுதிகள் இங்கே உள்ளன. கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், கதைகள் என இலக்கிய உலாவர குடில் என்ற விசேடமான பகுதி உள்ளது. இந்தப் பகுதியில் நீங்களும் உங்களுடைய ஆக்கங்களை இடம்பெறச் செய்யலாம். சினிமா செய்திகள், கட்டுரைகள், மற்றும் MP3 பாடல் தரவிறக்க வசதிகளும் இங்கே உள்ளன. Blog எனப்படும் தனித்துவமான சொந்த வலைப்பூக்களைக் கொண்டிருப்பவர்களை இணைக்கும் விசேட Bloggers Junction உம் இங்கே உண்டு.

www.inllanka.com என்ற முகவரியூடாக ஒரு தடவை இணையப்பரப்பில் நுழைந்துதான் பாருங்களேன்.

## Guide to Pages


| | |
|---|---|
| EC Mobile | 4 |
| EC Entertainment | 5 |
| EC Education | 6 |
| EC Books | 7 |
| EC Domestic | 8 |
| EC Shopping | 9 |
| EC Travel | 10 |
| EC Guide | 11 |
| EC Finance | 12 |
| EC Real Estate | 13 |
| EC Health | 14 |


## Guide to Advertisers


| | |
|---|---|
| Colonial Hardware Stores | 02 |
| Lanka Land Exchange | 05 |
| Perfect World Travels | 06 |
| Poobalasingham Book Depot | 07 |
| Royal Lucky Life | 10 |
| SGS Cards | 11 |
| A V Jewellers | 12 |
| Provisix International (Pvt) Ltd | 13 |
| Brintha Herbal Beauty Care Center | 14 |
| Chhaya Studio | 14 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் Mobile Phone தொலைந்துவிட்டால்...

- உடனடியாக உங்கள் சேவை வழங்குநருக்கு அதுபற்றி வாய்மொழி மூலம் அறியத் தாருங்கள்.
- உங்கள் தொலைத்தொடர்பு வசதியைப் பயன்படுத்தி வேறெவரும் இணைப்புக்களை ஏற்படுத்திப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் வகையில் தொடர்பைத் துண்டிக்குமாறு சேவை வழங்குநருக்கு அறியத்தாருங்கள்.
- உங்கள் தொலைபேசி தொலைந்துவிட்டதை உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம், உங்கள் அடையாள அட்டைப் பிரதியுடன் உங்கள் தொலைத்தொடர்பு சேவை வழங்குநருக்கு Fax செய்யுங்கள்.
- பின்னர் உங்கள் சேவை வழங்குநரிடம் நேரடியாகச் சென்று உங்கள் இலக்கத்துக் குரிய புதிய SIM Card ஐப் பெற்றுக்கொள்ளுங்கள். இதற்கு சிறு கட்டணம் ஒன்று அறவிடப்படலாம்.


InfoNationLanka.com

EC Ways (Pvt) Ltd.

**for latest Mobile Phones**

**&**

**Information**

**www.INL.com**




# கையடக்கத் தொலைபேசிகளுக்கு காப்புறுதி

*Dialog* டெலிகொம், தமது கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்களுக்கான காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகம் செய்துள்ளது.

கையடக்கத் தொலைபேசி காணாமல் போதலுடன், உபகரணம் பழுதடைதல், நீர் உட்புகுதல், விழுந்து நொருங்குதல் என்பவற்றுக்கும் நஷ்ட ஈடு பெற்றுக்கொள்ள இந்தக் காப்புறுதி உதவும்.

*Sri lanka Insurance, Union Assurance, Janashakthi Insurance, Eagle Insurance, Asian Alliance, Amana Takaful* ஆகிய காப்புறுதி நிறுவனங்கள் டயலொக் டெலிகொம் நிறுவனத்துடன் இந்த திட்டத்தில் இணைந்துள்ளன.

கையடக்கத் தொலைபேசியின் சந்தை விலையின் 5.5 சதவீதம் மட்டுமே காப்புறுதி சந்தாப் பணமாக அறவிடப்படும்.

சர்வதேச "ரோமிங்" வசதியுள்ள தொலைபேசிகளுக்கு விசேட காப்புறுதி வசதிகளும் உண்டு.

மேலதிக தகவல்களுக்கு:-

*Customer Hotlines*

***077 7678678***

***011 2678678***

# Mobile Phone Tips



- நீங்கள் வெளியே செல்லும்போது உங்களது சுற்றுப்புறம் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். சனநெரிசல் உள்ள இடங்களிலோ, பாதுகாப்பற்ற இடங்களிலோ கையடக்கத் தொலைபேசியைப் பாவிப்பதைத் தவிருங்கள்.
- ஆபத்து மற்றும் அவசர சேவைகளுக்கான தொலைபேசி இலக்கங்களை உங்கள் கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்து வைத்திருங்கள்.
- உங்கள் கையடக்கத் தொலைபேசியின் IMEI இலக்கத்தை உங்களுடைய தொலைத் தொடர்பு சேவை வழங்குநருடன் பதிவுசெய்து கொள்வதன்மூலம், அதன் பாதுகாப்பை அதிகரித்துக்கொள்ளுங்கள்.
- உங்கள் கையடக்கத் தொலைபேசியை காப்புறுதி செய்துகொள்ளுங்கள். இன்று பல காப்புறுதி நிறுவனங்களும், தொலைத் தொடர்பு சேவை வழங்குநர்களும் இந்தச் சேவையை வழங்குகிறார்கள்.
- உங்கள் கையடக்கத் தொலைபேசியின் பாவனையாளர் வழிகாட்டியை (*User's Guide*) கவனமாக வாசித்து, அதிலுள்ள மேலதிக பாதுகாப்பு வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
- எந்நேரமும் உங்கள் கையடக்கத் தொலைபேசியை Lock செய்து வைத்திருங்கள்.


## EC LIFE ஐ ஈசியாய்ப் பெற... DO SMS

Make Life Easy

EC Life இலவச சஞ்சிகை தொடர்ச்சியாக உங்கள் கைசேர்வதை உறுதி செய்ய இப்போதே முன்பதிவு செய்யுங்கள்

011 5673483 என்ற இலக்கத்தின் வழி தொலைபேசியில் தொடர்பு கொண்டு அல்லது

077 3616798 என்ற இலக்கத்தின் வழி SMS மூலம்

உங்கள் பெயர் முகவரியை பதிவுசெய்து EC Life ஐ தொடர்ந்து உங்கள் வீட்டுக்கு வரவழையுங்கள்

Make Life Easy through Effective Communication of Information

அடுத்த இதழில்

- Driving Licence எடுப்பது எப்படி?
- நினைத்ததை அடையும் மந்திரம் - Leasing
- வீடு கட்ட, வாங்க - இலகு வங்கிக் கடன்
- திறந்த பல்கலைக்கழகத்தில் என்னென்ன படிக்கலாம்?
- Colombo Shopping Guide
- EC PC – கணினி வழிகாட்டி
- Automobile Guide மோட்டார் வாகனம் வாங்கலாம் வாங்க
- பணத்தைப் பெருக்கும் பத்து வழிகள்
- இன்னும் இன்னும் ஏராளம் விடயங்கள்

*ஏமாற்றத்தைத் தவிர்க்க இப்போதே சொல்லிவையுங்கள்*






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# Entertainment

## Excel World Entertainment Park



குடும்பத்துடன் சென்று குதூகலிப்பதற்கு கொழும்பில் சிறந்ததொரு இடம் Excel World ஆகும். அழகான புத்துணர்ச்சி தரும் சூழலில், குழந்தைகள், இளைஞர்கள், பெரியவர்கள் என அனைத்து வயதினரையும் கவரும் களியாட்டங்கள் Excel World இல் நிறைந்திருக்கின்றன.

குழந்தைகளின் உடலுக்கும், மனதுக்கும் உற்சாகந் தரும் பல சாகச விளையாட்டுக்கள் இங்கே உள்ளன. The Gecko Grip என்ற விளையாட்டு துணிச்சலான அநுபவங்களைப் பெறத்துடிக்கும் குழந்தைகளின் ஆர்வத்திற்கு உரம்போடுகிறது. கூட்டாகப் பயிற்சி பெறக்கூடியவகையில் இதற்கான climbing wall அமைக்கப்பட்டுள்ளது.

Excel World செல்லும் யாரும், Laser Game Centre க்கு ஒரு முறை செல்லாமல் திரும்ப முடியாது. திறமையை வெளிப்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகளும் கொண்டாட்டங்களும் இங்குதான் நிறைந்து கிடக்கின்றன. நாட்டின் மிகப்பெரிய Game Center ஆகத் திகழும் இங்கே, மின்சாரக் கார், மோட்டார் சைக்கிள் சவாரிகள், bowling, உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களுடன் martial arts games, போர் மற்றும் மயிர்க்கூச்செறியும் பல விளையாட்டு வகைகளும் உள்ளன.

இலங்கை, இந்திய, மலேசிய, மொங்கோலிய அறுசுவை உணவுகளைப் புசிப்பதற்கு Avenue என்ற பரந்த எழில் நிறைந்த உணவுக் கூடமும் இங்குள்ளது. உடலுக்குகந்த Health Foods, செயற்கை வர்ணங்கள் கலக்கப்படாத பல்வேறுபட்ட பழரசங்கள் என்பன இங்கு கிடைக்கின்றன. இவற்றிற்கு மேலதிகமாக ஆடிப்பாடிக் குதூகலிப்பதற்கு DJ music ம், Karaoke வசதிகளும் இங்குள்ளன.

திரைப்படம் பார்க்கவேண்டுமெனில் CINAMATRIX என்ற பிரிவும் உள்ளது. Hollywood இலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல்வேறு சினிமா படங்களையும் இங்கு பார்த்து மகிழலாம். தென்கிழக்காசியாவிலேயே முதன்முதலாக இங்குதான் மயிர்க்கூச்செறியச் செய்யும் 4 பரிமாணக் காட்சி வசதியுடன் கூடிய, 24 இருக்கைகளைக் கொண்ட இவ்வாறான ride அமைக்கப்பட்டுள்ளது.

பனிப்பிரதேசம் ஒன்றுக்கே சென்றுவிட்டது போன்ற மனதை விட்டு நீங்காத அநுபவத்தை The Dome என்ற பகுதியில் பெறலாம். The Blizzard trinket என்ற பெயரில் 6000 சதுர அடிகளில் பனி விழுவது போன்ற தோற்றத்துடன் அமைக்கப்பட்ட விசாலமான இந்த Dome ல் உள்ளரங்க விளையாட்டுக்கள், நடன வகுப்புக்கள் என்பவற்றுக்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

ஒரு நாளை இனிமையாகக் களிக்க இவற்றைவிட வேறென்ன வேண்டும்?

**Excel World**
338, TB Jayah Mawatha, Colombo 10.
பஸ்வழி 155, 120 (HNB டவரின் முன்பாக)

### MORE ENTERTAINMENT PLACES

**Hotshot**
4th Floor, Majestic City, Colombo 04. Tel: 2552424

**Bandarnaike Museum**
BMICH, Tel: 2691131, 2686421

**Artist's Gallery**
18A, Sarasavi Gardens, Nawala Road, Nugegoda.

**Dutch Period Museum**
Prince Street, Colombo 11.

**Sathuttu Uyana**
Vihara Maha Devi Park, (formerly Victoria Park), Sir Marcus Fernando Mawatha, Colombo 7

**Natural History Museum**
Sir Marcus Fernando Mawatha, Colombo 07.


INL infoMationLanka.com

Lots of Entertainment through a Web Media

சினிமா செய்திகள், விமர்சனங்கள், கட்டுரைகள், MP3 Songs Downloads, Colombo Cinema & Theatre Guide.

visit: www.INL.com

EC Life இல் விளம்பரம் செய்ய...

EC Ways (Pvt) Ltd.
No.4, IBC Road, Colombo 06.
Tel: 011 5673483, Fax: 011 2506614
Hotline: 077 3616796



இலவச சிறு விளம்பரம்

காணி, வீடு, பொருள்களை விற்க, வாங்க இலவசமாக சிறுவிளம்பரம் செய்யலாம்.



BUY, SELL, RENT, LEASE, CONSTRUCT RESIDENTIAL/ COMMERCIAL PROPERTIES

Hot Line
011-5653650

Mobile
0777-350027

கொழும்பிலோ அல்லது இலங்கையின் வேறு எப்பாகத்திலோ நீங்கள் வீடு, காணி, வர்த்தக நிலையம் ஒன்றை வாங்க விற்க, வாடகைக்கு விட, வாடகைக்கு பெற வசதிகள் செய்து தரப்படும்.

இலங்கையிலுள்ள வீட்டை/ வியாபார நிலையத்தினை தரமான முறையில் பராமரித்து வாடகைக்கு அமர்த்தி வாடகை வசூலித்து கொடுப்பதற்கு உத்தரவாதம் உள்ள ஒரே ஒரு நிறுவனம்.

தரமான வீடு, கட்டட நிர்மாணப்பணிகளுக்கு நம்பிக்கையான அனுபவசாலிகள்.


எங்கள் நிறுவனத்தில் இலவசமாக பதிவு செய்து கொள்வதன்மூலம் மேற்கண்ட சேவைகளை பெற உங்களுக்கும் சந்தர்ப்பம்.

Lanka Land Exchange (Pvt) Ltd
The Real Estate Bank

No. 80/2, New Chetty Street, Colombo 13, Sri Lanka.
E-mail : lankalandex@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினித் துறையில் கற்க விரும்பும் மாணவர்களுக்கு...



# Study at University of East London

**O/L, A/L படித்துவிட்டு கணினி கற்க விரும்பும் மாணவர்களுக்கு ஓர் வழிகாட்டி**

கணினி கற்க விரும்பும் மாணவர்கள் முதலில் கணினியின் எந்தத்துறையில் தேர்ச்சி பெறுவது என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

எந்தத் துறையில் தேர்ச்சி பெறவேண்டுமானாலும் எல்லோருக்கும் கணினியின் அடிப்படை அறிவு இருத்தல் வேண்டும். இதற்கு *Microsoft Office* ஐ ஆரம்பத்தில் கற்பது நன்று. இதில் *Ms Word, Ms Excel, Ms Powerpoint, Ms Access* போன்றவை பொதுவாகக் கற்பிக்கப்படுகின்றன. இதில் *Ms Word* இல் எப்படி *Type* செய்வது, *Type* செய்தவற்றை எப்படி *Edit* செய்வது, சாதாரணமாக ஒரு *Page* ஐ *Design* பண்ணுவது, *Spell Checking, Printing* போன்றன உள்ளடங்குகின்றன.

*Excel (Accounting Package)* நாம் சாதாரணமாக கணக்குகளை செய்வதற்கு உதவும். கூட்டல், கழித்தல் முதற்கொண்டு முழுமையாக ஒரு கம்பனி கணக்கு வழக்குகளைப் பதிவு செய்வது வரையில் இதில் செய்து முடிக்கலாம். இதேபோல் ஒரு விடயத்தை *Slide* வடிவில் செய்து *Animation* கொடுப்பதற்கு *Powerpoint* ஐ உபயோகிக்கின்றோம். *Ms Access* இனைப் பயன்படுத்தி எமக்குத் தேவையான *Database* இனை உருவாகிக் கொள்ளலாம். *Program* செய்வது போன்றவற்றிற்கும் இது உபயோகிக்கப்படுகின்றது.

*for more articles on Education and career development log on:*
www. INL .com

லண்டனில் பட்டப்படிப்பு மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பை தொடர ஆர்வம் கொண்டிருப்பவர்கள், *University of East London* இல் நேரடியாக அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக் கிட்டியிருக்கிறது.

ஆர்வம் உள்ளவர்கள் *chitral@uel.ac.uk* என்ற *e-mail* ஊடாக விண்ணப்பிக்கலாம் என்று கோரப்பட்டுள்ளது. விண்ணப்பித்துள்ள மாணவர்களை அநுபவமிக்க விரிவுரையாளரான சித்ரல் விஜேயசேகர நேர்காணல் மூலம் தெரிவுசெய்யவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாதம் இடம்பெறும் இந்த நேர்காணலில் பங்குபற்றி நீங்கள் தேர்ச்சி பெற்றால், *University of East London* இல் நேரடியாக அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிட்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்துகொள்ள ***visit www.uel.ac.uk/international***

**குறிப்பு:** 2007 ஏப்ரல் 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும்படியாக *UK* விசாக்களுக்கான விலைப்பட்டியல் மாற்றப்பட்டுள்ளது. வீசா விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், எவ்வாறு விண்ணப்பம் செய்வது போன்ற ஆலோசனைகளுக்கும்...

*visit* ***www.britishhighcommission.gov.uk/srilanka***

*Photo Editing, Animation, Creative* போன்ற துறையில் ஆர்வமுள்ள மாணவர்கள் *Multimedia Technology* கற்கலாம். இதில் *Photo Shop, Flash, Premier Pro, Sound forge, Swish Max, After Effects* போன்றவை பொதுவாக உள்ளடங்குகின்றன. இதில் *Photoshop* படங்களை *Edit* செய்வது தொடர்பானது. படங்களை வரைந்து, அல்லது *import* பண்ணி அவற்றிற்கு *Animation* கொடுப்பதற்கும், *Frame* களை உருவாக்கி பல படங்களைச் சேர்த்து திரைப்படக்காட்சி போல் விரிப்பதற்கும் *Flash* உதவும். ஒலிப்பதிவுகள், மற்றும் *Editing*க்கு *Sound Forge* உதவும்.

படங்களுக்குள் ஏதாவது *Animation* கொடுப்பதற்கு *After Effects.* படங்களை *Animation* செய்வது, பல தரப்பட்ட Effects ஐ பாவித்து *Animation* கொடுப்பதற்கு *Swish Max. Audio, Video Edition, Mixing* க்கு Premier pro. முப்பரிமாண படங்கள் தயாரிப்பிற்கு *Maya.*

*Internet* இல் ஒரு *Web page* ஐ உருவாக்குவது தொடர்பாகக் கற்பதற்கு *Web Designing & Development* கற்கவேண்டும். *HTML, Micromedia Dreamweaver, DHTML(Style Sheet, Java Script), Photoshop, Animation Tools, Macromedia Flash,* போன்றவை இந்தப் பாடத்திட்டத்திற்குள் அடங்கும்.

*Data Entry, Book Publishing* சம்பந்தமான துறைகளில் ஆர்வம் இருந்தால் *Desktop Publishing* கற்கலாம். *Adobe Pagemaker, Corel Draw, Corel Photopaint, Photoshop, Illustrator, Image ready* என்பன இதற்குள் அடங்கும்.

*Computerized Accounting* படிக்க விரும்பினால் *Acc Pac, Quick Books, Tally, M.Y.O.B* போன்றவற்றைக் கற்கலாம்.

கணனித்துறை சார்ந்த கல்வி *Programming Technology, AutoCAD, Graphic Designing, Networking, Hardware, Video Editing* என இன்னும் பலவாக விரியும். இவைபற்றி மாணவர்கள் சுய தேடல் மூலம் அறிந்துகொள்ள வேண்டும்.

தகவல்:
***Ratha Senthuran***
நிர்வாக பணிப்பாளர் - *ICIS*

**Visa Arrangements and Immigration Consultancy Services**
**விசா ஒழுங்குகளும் குடியகல்வு ஆலோசனைகளும்**

We are capable of and assure you professional assistance, advice and guidance from UK qualified officials with more than 15 years of experience in immigration issues. ***We have a success rate of 99%***

***Visit Visa*** - விருந்தினர் விசா
*Advice on obtaining visas for holiday, Business visits and visiting relatives or friends.*

***Student Visa*** - மாணவர் விசா
*Advice on obtaining student Visas (2-3 years) choosing a course / college / university and accommodation.*

***Refusals*** - நிராகரிப்புக்கள்
*We are specialized in dealing with Visa Refusals and have a high success rate.*

***Tour Operation (Inbound / Outbound Tours)*** - சுற்றுலா செயற்பாடுகள்
*To UK, USA, France, Italy, Australia, Canada, New Zealand, etc. and Sri Lanka Sighseeing Tours.*

Consultant speaks in English



*Hot Line:*
**0773 864460 or 0785 230555**

**Perfect World Travels**
*Explore the Perfect World*

*42B, Vaverset Place (Corner of Marine Drive and Vaversat Place), Wellawatte, Colombo 06.*
*Tel / Fax: 060 2150835 Email: perfect_wld@yahoo.com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலவிதமான புத்தகங்களுக்குமான ஒரு கூரை பூபாலசிங்கம் புத்தகசாலை

ஜெயகாந்தன், ஜானகிராமன், இரமணிச் சந்திரன், லக்ஸ்மியின் நாவல்கள், மருத்துவ, பொறியியல் கல்வி ஆங்கில நூல்கள், கணக்கியல், CIMA பாடநூல்கள், க.பொ.த. (சா/த), (உ/த) பாடப்புத்தகங்கள், வினாத் தாள்கள், குழந்தை நூல்கள் மற்றும் பாடசாலைக் காகிதாதிகள், உபகரணங்கள்...

இவ்வளவையும் வாங்குவதென்றால் பல கடைகள் ஏறி இறங்கி, ஒவ்வொரு கடையிலும் தேடிப் பார்க்கவேண்டியிருக்கும்.

ஆனால், 60 வருடங்களுக்கு மேலாக புத்தக வியாபாரத் துறையில் முத்திரை பதித்துவரும் யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலை, இலக்கம் 202, செட்டியார் தெரு, கொழும்பு 11 என்ற முகவரியில் அமைத்துள்ள புதிய நவீனமயமான இரண்டு மாடிக் காட்சியறையில் இவையனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பரந்த இடவசதியோடு, தரம்பிரித்து, நேர்த்தியாக புத்தகங்கள் அடுக்கப்பட்டுள்ள இந்தப் புதிய காட்சியறையில், உங்களுக்குத் தேவையான அனைத்துவிதமான புத்தகங்களையும், காகிதாதிகளையும் சிரமமின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

கலை, இலக்கியம், வரலாறு, மருத்துவம், அறிவியல், விஞ்ஞானம், விளையாட்டு, உடல் ஆரோக்கியம் என எல்லாவிதமான துறைகளிலும் எண்ணிடலங்காத புத்தகங்கள் இங்கே நிறைந்து கிடக்கின்றன. இந்தியாவிலிருந்து வெளியாகும் அனைத்துவிதமான புத்தகங்கள், மற்றும் சஞ்சிகைகளையும் உடனுக்குடன் இங்கு பெற்றுக்கொள்ள முடிவதுடன், அனைத்துலக சஞ்சிகைகள், மற்றும் சகல இலங்கை வெளியீடுகளையும் கூட இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

முதலாவது மாடியில் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பிரிவில், சிறுவர்களுக்கு உகந்த பலவிதமான அருமையான நூல்கள் நிறைந்து கிடக்கின்றன. சிறியவர்களே சென்று ஆறுதலாகத் தேடி தமக்குத் தேவையான புத்தகங்களைத் தெரிவுசெய்ய வசதியாக இந்தப் பகுதி விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

புத்தக இறக்குமதியில் மட்டுமன்றி, வெளியீட்டுத் துறையிலும் ஈடுபட்டுவரும் பூபாலசிங்கம் புத்தகசாலை, வியாபாரிகளுக்கு விசேட கழிவை வழங்குகிறது. அரச நிறுவனங்கள், பாடசாலைகள், நூலகங்கள் 10வீத கழிவில் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

"புத்தக விற்பனை வெறும் வியாபாரமல்ல. அது ஒரு கலை, மக்கள் சேவை" என்று குறிப்பிடும் பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் ஸ்ரீதர்சிங், "தகப்பன் காலத்திலிருந்து தொடர்ந்துவரும் பாரம்பரியமான இந்தத் தொழில் எம் இரத்தத்தோடு ஊறிவிட்டது" என்கிறார்.

யாழ்ப்பாணத்தில் மூன்று தடவைகள் எரிக்கப்பட்டபோதும், பீனிக்ஸ் பறவைபோல் மீண்டும், மீண்டும் உயிர்பெற்று, இன்று கொழும்பிலும், வெளிநாடுகளிலும் கிளை பரப்பி அது தலைநிமிர்ந்து நிற்கக் காரணம் இதுதான் எனலாம்.



## கடைக்குப் போகாமலே... புத்தகங்களை வீட்டுக்கு வரவழையுங்கள்

பூபாலசிங்கத்தில் புத்தகம் வாங்குவதற்கு பஸ் பிடித்து செட்டியார் தெருவுக்கு ஒரு பயணம் வைக்கவேண்டுமே என்று நினைப்பவர்களுக்கு ஒரு இனிப்பான செய்தி.

வீட்டில் இருந்தபடியே பூபாலசிங்கம் புத்தகசாலையுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உங்களுக்குத் தேவையான புத்தகங்களைச் சொன்னீர்களானால், *VPP* தபால் சேவையின் மூலம் உங்கள் முகவரிக்கே அவர்கள் புத்தகங்களை அனுப்பிவைப்பார்கள். வீட்டுவாசலில் தபால்காரரிடம் உரிய கட்டணத்தைச் செலுத்திப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ரூபா 500க்கு மேற்பட்ட கொள்வனவு என்றால், தபால் கட்டணம் இன்றியே புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம். குறிப்பிட்ட தொகைக்கு மேல் கொள்வனவு செய்வோரின் வீட்டுக்கே புத்தகங்கள் நேரடியாக அனுப்பிவைக்கப்படும். பூபாலசிங்கத்தில் கிடைப்பனவாகவுள்ள புத்தகங்கள் தொடர்பான தகவல்கள் தேவைப்படுவோர், புத்தக விபரப்பட்டியலை தபால் மூலம் கேட்டுப் பெறமுடியும்.

புத்தகங்கள் தொடர்பான விசாரணைகள், ஆலோசனைகள், ஓடர்களுக்கு 011-2422321 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

## Libraries



நாளேடுகள், புத்தங்களை வாசிப்பதற்கும் அமைதியான சூழலில் படிப்பதற்கும் மாணவர்களுக்கும், ஏனையவர்களுக்கும் பொருத்தமான இடம் நூலகங்கள் தான்.

கொழும்பில் நூலகங்கள் பல இருந்தபோதும் இலங்கை, இந்திய தமிழ் எழுத்தாளர்களினது புத்தகங்களையும், பல மொழிபெயர்ப்பு நூல்களையும் பெறக்கூடிய நூலகமாக கொழும்பு தமிழ்ச் சங்கம் விளங்குகிறது. இந்த நூலகத்தில் அங்கத்தவராகுவதன் மூலம் புத்தங்களை வாடகைக்குப் பெறவும் முடியும்.

**கொழும்பு தமிழ்ச் சங்கம்**
இல. 7, 57 வது ஒழுங்கை, உருத்திரா மாவத்தை,
கொழும்பு 06. தொலைபேசி: 011 2363759

மேலும் சில நூலகங்கள்:

**National Library**
*No 14, Independence Avenue, Colombo 07. Tel : 011 2698847, 2685197*

**Dehiwala, Mt.Lavania Municipal Library**
*Ramanathan Road, (Opposite to Frazer Avenue) Dehiwala.*

*for details of Bookshops in Colombo, Log on:*
www. INL .com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Budget shop

## A Few Budget Shop Spots

283, Galle Road, Wellawatte.
299, Galle Road, Wellawatte.
28, Mukilan Road, Kirulapona.
215/14, Park Street, Kirulapona.
562, Galle Road, Kollupitiya.
109, K.Siril Perera Mawatha, Kotahena East.
1, Sri Tharma Mawatha, Colombo 10.
145, Jampatah Street, Colombo 13.
765/258, Danista de Silva Mawatha, Colombo 14.
767, Aluthmawatha, Mattakuliya.

தகவல்: Colombo South Co-operative Society Ltd.



# அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைப்பு

மார்ச் 5ம் திகதி முதல் 10 அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இவை தவிர, ஏனைய சில பொருள்களின் விலைகளும் குறைக்கப்பட்டிருப்பதை பொருள்களின் சந்தை விலை நிலவரங்களை ஆராயும் போது அறிந்துகொள்ள முடிந்தது. விலை குறைக்கப்பட்டு விற்கப்படும் சில பொருள்களின் விலை விபரங்களை இங்கே தருகிறோம்.

| பொருள் | புறக்கோட்டை விற்பனை நிலையங்கள் | பட்ஜட் ஷொப் |
|---|---|---|
| சம்பா அரிசி 1Kg | 34.00 | 28.00 |
| வெள்ளைப் பச்சையரிசி 1Kg | 24.00 | 31.00 |
| சிவப்புப் பச்சையரிசி 1Kg | 45.00 | 36.00 |
| நாட்டரிசி 1Kg | 40.00 | 33.00 |
| கோதுமை மா 1Kg | 40.00 | 43.00 |
| சீனி 1Kg | 56.00 | 62.00 |
| லக்ஸ்பிறே 400g | 149.00 | 149.00 |
| அங்கர் 400g | 169.00 | 159.00 |
| நெஸ்பிறே 400g | 163.00 | 160.00 |
| மலிபன் 400g | 152.00 | 147.00 |
| மைசூர் பருப்பு 1Kg | 62.00 | 74.00 |

காலத்துக்கேற்ப விலைகளில் மாற்றங்கள் ஏற்படலாம் என்பதை வாசகர்கள் கவனத்திற் கொள்ளவும்.



# Movers

கொழும்பில் வாடகை வீடுகளில் குடியிருப்பவர்கள் வீடு மாறவேண்டி ஏற்படும் போது, வீட்டுப் பாவனைப் பொருள்களை ஏற்றி இறக்குவது பெரும் தலையிடியாக இருக்கும். இதற்கு Movers மூலம் தீர்வு கிடைக்கிறது. உங்கள் குடியிருப்புக்கு அருகிலுள்ள Movers ஐ தொடர்பு கொண்டு பேசினால், உங்கள் பொருள்களை முழுக் கவனத்துடன் அவர்கள் உரிய இடத்தில் கொண்டு சேர்ப்பார்கள். இப்படியான சில Movers இன் விபரங்கள் வருமாறு.

- **Family Movers**
  49, School Lane, Colombo 03.
  Telephone: 2503040
- **Trans World Movers**
  26,Col.T.G.Jayewardene Mawatte,
  Colombo 03. Telephone: 2575470
- **E.B.Creasy & Co.**
  98, Sri Sangaraja Mawatte, Colombo 10.
  Telephone: 2478770
- **MIT Cargo**
  400, Deans Road, Colombo 10.
  Telephone: 2685971-3

Movers

# Electronic Repairs

அன்றாட வாழ்வில் நாம் பல்வேறு இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்துகின்றோம். இவை திடீரெனப் பழுதடைந்துவிட்டால் எம் பாடு திண்டாட்டமாகிவிடுகிறது. இப்படியான நேரங்களில் உடனடியாக அவற்றைத் திருத்திக்கொள்வதற்கு நீங்கள் நாடக் கூடிய சில இலத்திரனியல் பழுதுபார்க்கும் நிலையங்களின் விபரங்கள் இதோ.

குறிப்பு: இலத்திரனியல் உபகரணங்களைப் பழுதுபார்க்கக் கொடுக்கும்போது, என்ன பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது? அதைச் சரிசெய்ய எவ்வளவு செலவாகும்? என்பதை பழுதுபார்க்கும் நிலையத்தில் முன்கூட்டியே கேட்டறிந்துகொண்டு, அவ்வளவு செலவுசெய்து உங்கள் உபகரணத்தைப் பழுதுபார்ப்பது பொருத்தமா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.



- **Abans Quick Service Centre**
  506, Galle Road, Colombo 06.
  Telephone: 2364100 - 5
  (Pick - up Large appliances)
- **Brown & Co.**
  481, T.B.Jayah Mawatte, Colombo 10.
  Telephone: 2697111
- **Majestic Electric Co.**
  103/105 Galle Road, Colombo 04.
  Telephone: 2593225
- **TELECAVE**
  410-1/1, Galle Road, Colombo 06.
  Telephone: 2360280, 2360821
  (Quick Mobile Service)
- **Tanya & Tamara**
  439, Elvitigala Mawatte, Colombo 05.
  Telephone: 2501344-6
- **Page Electronics**
  1, 6th Lane, Colombo 03.
  Telephone: 4517421 - 8

  294, Hospital Road, Dehiwala.
  Telephone: 4204535, 5553636
  (Open 7 Days a week! Pick-up and delivery service for large appliances)

## Dial 2321696

பொருட்கொள்வனவு தொடர்பாக பாவனையாளர்கள் தமது முறைப்பாடுகளை உடனுக்குடன் தெரிவிப்பதற்கு வசதியாக, பாவனையாளர் விவகார அதிகாரசபை மேற்படி தொலைபேசி இணைப்பை பிரத்தியேகமாக ஏற்படுத்தியுள்ளது. கொள்வனவின்போது ஏற்படும் பிரச்சினைகள், பொருள் விலைகளில் உண்டாகும் குழப்பங்களைத் தீர்க்க இந்த இணைப்பைப் பயன்படுத்தலாம். ஏனைய முறைப்பாடுகள் பற்றி பாவனையாளர் அதிகாரசபையின் வழமையான தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்புகொள்ளலாம்.
2445897, 2393577, 2393495

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புறக்கோட்டை மனிங் மார்க்கட்

-நேரடி ரிப்போர்ட்-

புறக்கோட்டை மரக்கறிச் சந்தையின் (மனிங் மார்க்கட்) மரக்கறி விலை நிலவரங்களை எமது ஈ.சி.லை.'.ப் வாசகர்களுக்காகத் திரட்டித்தரும் நோக்கில் 2007 மார்ச், 25 அன்று நாம் அங்கு ஒரு நேரடி விசிட் அடித்தோம். கொழும்பு நகரின் பெரும்பாலான பிற பகுதிகளில் நிலவும் மரக்கறி விலைகளுடன் ஒப்பிடுகையில், புறக்கோட்டைச் சந்தையில் பெரிய வித்தியாசம் இருப்பதை இதன்போது நாம் கண்டறிந்து கொண்டோம். இதனை எமது வாசகர்களுக்கு அறியத்தருவது எமது கடமையல்லவா? இதோ, சில முக்கிய மரக்கறி மற்றும் பழ வகைகளின் விலைப் பட்டியல்:

| | மனிங் மரக்கறிச் சந்தை | ஏனைய மரக்கறி விற்பனை நிலையங்கள் |
|---|---|---|
| பச்சை மிளகாய் 1Kg | 50/= | 130/= |
| பெரிய வெங்காயம் 1Kg | 55-60/= | 60/= |
| சிறிய வெங்காயம் 1Kg | 65-70/= | 75/= |
| கோவா 1Kg | 60/= | 80/= |
| லீக்ஸ் 1Kg | 50/= | 80/= |
| போஞ்சி 1Kg | 70/= | 90/= |
| கரட் 1Kg | 75/= | 90/= |
| பீட்ரூட் 1Kg | 50/= | 80/= |
| உருளைக் கிழங்கு 1Kg | 55/= | 70/= |
| தக்காளி 1Kg | 60/= | 70/= |
| கத்தரிக்காய் 1Kg | 30/= | 60/= |
| வெண்டைக்காய் 1Kg | 30/= | 55/= |
| பீர்க்கங்காய் 1Kg | 35/= | 70/= |
| பாகற்காய் 1Kg | 35/= | 80/= |
| வாழைக்காய் 1Kg | 50/= | 90/= |
| தேங்காய் 1 | 22/= | 22-24/= |
| தேசிக்காய் 1Kg | 30/= | 40/= |
| வாழைப்பழம் (கோழிக்கூட்டு) 1 | 8/= | 10-12/= |
| பப்பாளி 1Kg | 60/= | 90/= |
| மாம்பழம் சிறியது 1 | 10/= | 25/= |
| மாங்காய் 1Kg | 100/= | 160/= |

• விலைகளில் காலத்திற்குக் காலம் மாற்றம் ஏற்படலாம் என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்.

# Gas முடிந்துவிட்டதா?

## Don't worry - Dial it

திடீரென சமையல் எரிவாயு முடிந்துவிட்டால் உடனே தொலைபேசியில் அழைத்து வீட்டுக்கே வரவழைத்துக்கொள்ளும் இலக்கங்கள் சிலவற்றை கடந்த இதழில் தந்திருந்தோம். கொழும்பின் பல பாகங்களுக்குமுரிய இலக்கங்களையும் தந்திருக்கலாமே என்று பல வாசகர்கள் எம்மிடம் கேட்டிருந்தார்கள்.

பொதுவாக எந்தப் பிரதேசமாக இருந்தாலும், 2505808 என்ற இலக்கத்தில் Shell Gas Lanka வை, அல்லது, 2577823, 2565047 ஆகிய இலக்கங்களில் LAUGFS Lanka Gas (Pvt) Ltd ஐத் தொடர்புகொண்டு உங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள Dealer இன் தொடர்பிலக்கத்தைக் கேட்டுப் பெறலாம்.

கடந்த *EC Life, EC Domestic* இல் தரப்பட்டுள்ள *Gas Delivery* முகவர் இலக்கங்களையும் பார்க்கலாம்.

*for online shopping guide, Log on:*

www.INL.com

# Play & Learn

## Education Toys

குழந்தைகளுக்கு அன்பளிப்புச் செய்வதற்காக விளையாட்டுப் பொருள் ஒன்றைத் தெரிவு செய்யும்போது, அது வெறும் வேடிக்கைப் பொருளாக அன்றி அறிவுக்கு விருந்தளிப்பதாகவும் இருந்தால், அது அவர்களின் எதிர்கால அறிவு விருத்திக்கான அத்திவாரமாகவும் அமையலாம் அல்லவா?

விளையாட்டு மூலம் கற்பதில் எந்தக் குழந்தைக்கும் தனியான ஆர்வம் இருக்கும் என்று விஞ்ஞான ஆய்வுகள் கூறுகின்றன. உங்கள் குழந்தைகளுக்கு இன்று சந்தையில் பிரபலமாகவிருக்கும் Educational Toys ஐ வாங்கிக் கொடுங்கள். விளையாட்டுடன் உங்கள் குழந்தையின் மூளை சுறுசுறுப்பாக இயங்கவும், சுயமாக செயற்படவும் அது வழியை ஏற்படுத்தும்.

குழந்தைகள் விளையாடி மகிழ்வதற்கென எவ்வளவோ விளையாட்டுச் சாதனங்கள் இன்று புழக்கத்தில் உள்ளன. *Blocks, Pretend Play, Brain Teasers, Electronic Books, Puzzles, Builders, Doll houses and Castles, Floor Puzzles, Personalized Letters, Vehicles, Arts and Crafts, Skill Building, Thinker, Junior Laptops* என்று பலவிதமான விளையாட்டுச் சாதனங்கள் இன்று சந்தையில் உள்ளன.

இவ்வாறான *Educational Toys*ஐ கொழும்பு நகரில் வாங்கக்கூடிய சில இடங்களின் விபரங்கள் வருமாறு:

- ***Vtech CADICO (Pvt) Ltd.***
  *No.233, Thimbirigasyaya Road, Colombo 05.*
  (பஸ் வழி இலக்கம்: 135)
- ***Lumala Cycle City***
  *Bambalapitiya, Colombo 04.*
  (பஸ் வழி இலக்கம் 155, 100, 101, 102)
- ***Arpico Super Center***
  *No. 69, Hyde Park Corner, Colombo 02.*
  (பஸ் வழி: 138, 155)
- ***House Of Fashion***
  *28, Duplication Road, Colombo 05.*
  (பஸ் வழி: 154, 155, 100, 101, 102 பம்பலப்பிட்டி தொடர்மாடிக்கு அருகில் இருக்கும் தரிப்பிடத்தில் இறங்கி விசாகா வீதியால் நடந்து டுப்ளிகேஷன் வீதிக்குச் செல்ல வேண்டும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிக்கனமான வாகனப் பாவனைக்கு 10 வழிகள்

மீண்டும் எரிபொருள் விலை ஏறிவிட்டது. அடிக்கடி இடம்பெறும் இந்த விலையேற்றத்தைச் சமாளிக்க, எரிபொருள் சிக்கனத்தைப் பேணுவதே ஒரே வழி.

- வாகனம் ஒரே இடத்தில் நிற்கும்போது இயந்திர இயக்கத்தை நிறுத்திவிடுங்கள். பெற்றோல் வாகன இயந்திரம் 30 செக்கன்களுக்கு மேல் ஒரே இடத்தில் நின்றபடி இயங்கக்கூடாது.
- வாகனத்தை சீரான வேகத்தில் செலுத்துங்கள். வேகத்தை அடிக்கடி கூட்டிக் குறைப்பதால் எரிபொருள் செலவீனம் அதிகரிக்கும்.
- கூரையில் பொருள்களை ஏற்றிச் செல்வதைத் தவிர்ப்பதும், கண்ணாடிகளை மூடியபடி பயணிப்பதும் எரிபொருள் சேமிப்புக்கு உதவும்.
- இயந்திரம் குளிர்ந்திருக்கும்போது அதனை இயக்குவதற்கு அதிகளவு எரிபொருள் தேவைப்படும். இதனால் ஒரு தடவை வாகனத்தை எடுக்கும்போதே சகல வேலைகளையும் முடித்தல் சிறப்பு.
- சாதாரண (Regular) எரிபொருளிலேயே வாகனங்கள் திறம்படச் செயற்படும். சிறப்பான எரிபொருளை (Premium) பயன்படுத்துவது நல்லது என்றெண்ணிச் செலவை அதிகரிக்கத் தேவையில்லை.
- மலிவு விற்பனைகள் மேற்கொள்ளப்படும்போது தேவையான உராய்வு நீக்கிகள் (Oil), மற்றும் உப சாதனங்களைக் கொள்வனவு செய்துகொள்ளவேண்டும்.
- வாகன இயந்திரம் சரியாக டியூன் (Tune) செய்யப்பட்டிருத்தல் அவசியமாகும். சரியாக டியூன் செய்யப்படாதவிடத்து 10 முதல் 20 சதவீதமான எரிபொருள் விரயம் ஏற்படும்.
- உரிய காலங்களில் வாகனப் பராமரிப்பு மற்றும் பரிசோதனைகளையும் (Service) மேற்கொள்ளவும்.
- வாகனத்தின் சக்கரங்களுக்குப் போதியளவு காற்று இருக்கின்றதா என்பதை அடிக்கடி பரிசோதிக்க வேண்டும். காற்றழுத்தம் குறைவாக இருக்கும்போது சக்கரங்கள் சுழல்வதற்கு அதிகளவு சக்தி தேவைப்படுவதால் எரிபொருள் வீண் விரயமாகும்.
- ஒவ்வொரு முறை வாகனத்துக்கு எரிபொருள் நிரப்பும்போதும், நிரப்பப்படும் எரிபொருளின் அளவையும், தூர மானி வாசிப்பையும் குறித்துக்கொண்டு, பொதுவாக லீற்றர் ஒன்றுக்கு எத்தனை கிலோ மீற்றர் வேலை செய்கிறது என்பதை தொடர்ச்சியாக அவதானித்து வந்தால், திடீரென ஏதேனும் மாற்றம் தென்படும்போது உடனடியாக அதனைச் சரிசெய்து கொள்ளலாம்.

*for more information on Travel Log on: www.INL.com*


## அதிர்ஷ்ட நியூமராலஜி

### நீங்களும் அதிர்ஷ்டசாலியாகலாம்



அதிர்ஷ்டம் தரும் அதிநவீன அதிர்ஷ்ட நியூமராலஜி எண்கணிதத்தில் 48 வருடங்களுக்கும் மேல் ஆராய்ச்சி மூலம் அனுபவம் பெற்றவர். பிரபல இலங்கை, இந்திய அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், தென்னிந்திய சினிமா நட்சத்திரங்கள், வியாபாரிகள் மற்றும் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு அதிர்ஷ்டமாக வாழ அதிர்ஷ்டக் குறிப்புக்கள் அமைத்துக் கொடுத்தவர். எந்த வயதிலும் செல்வம், வியாபாரம், அதிர்ஷ்டமான பெயரமைப்பு, அதிர்ஷ்டமான கையொப்பம், கல்வி, தொழில், காதல், காதல் பிரச்சினைகள், பொருத்தமான அதிர்ஷ்டத் திருமணம், திருமணம் ஆனவர்களின் பிரச்சினைகள், குழந்தைச் செல்வம், உங்கள் அதிர்ஷ்டமான இரத்தினக் கற்களின் விபரங்கள், இயற்கை வைத்திய விபரங்கள் மற்றும் எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்று நிரந்தரமாக என்றென்றும் நீங்களும் அதிர்ஷ்டமுடன் வாழலாம். இரகசியம் பேணப்படும். விபரங்களுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்க.

அதிநவீன மனோதத்துவ நியூமராலஜி நிபுணர் :



**பேராசிரியர். டாக்டர். ரசூல் மன்சூர்**

**Prof. Dr. RAZUL MANZURR**

(MOD MANZURR)

Specialist in Psychological Numerology

Lucky Gems, Numero Gems, Natural Medication & Medicinal Gems

**ROYAL LUCKY LIFE**

No : 198/2/A, First Floor, Hill Street, Dehiwela, Sri Lanka.

Mobile : 071-4136254, 078-5118019, 071-4182713

Tel : (011) 2726598, Fax : (011) 5527970

E-mail : razulmanzurr@yahoo.com


## Important Phone Numbers



**Bus Transport Inquiry (Pettah)** - Tel: 2329606

**Central Bus Stand** - Tel: 2329604

**Railway Transport Inquiry (Fort - Maradana)** Tel: 2434215, 2421281

**Fort Railway Station** - Tel: 2432424

**Travel Information Centre** - Tel: 2503629

## Taxi Service



**Air Port Express** Tel: 5555050
**Airport Link** Tel: 5336666
**Quick Radio Cabs** Tel: 2502888/9
**Sawallo Cabs** Tel: 5377677
**Yellow Rado Cabs** Tel: 2942942
**Excel Cabs** Tel: 2889889
**GNTC** Tel: 2688688
**Safeway Express** Tel: 2622265
**Unique Cabs** Tel: 2733733
**Autolink** Tel: 2848748
**Crown Cabs** Tel: 2819819
**Gel Cabs** Tel: 2731731



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாள அட்டை தொலைந்துவிட்டால்...?



- உங்களது அடையாள அட்டை தொலைந்து விட்டால் தாமதிக்காமல் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து, முறைப்பாட்டு இலக்கத்தையும், முறைப்பாட்டுப் பிரதியொன்றையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

- அதனை உங்கள் பிரதேச கிராமசேவையாளரிடம் காண்பித்து, புதிய அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று முழுமையாகப் பூர்த்தி செய்து, உங்கள் பிறப்புச் சான்றிதழ் பத்திரம், ஐந்து புகைப்படப் பிரதிகளுடன் கிராமசேவகரிடம் ஒப்படையுங்கள்.

- தொலைந்த அடையாள அட்டையில் காணப்பட்ட முகவரியிலேயே நீங்கள் தொடர்ந்தும் வசித்து வருபவராக இருந்தால் பிரச்சினை இல்லை. அப்படியில்லாமல் புதிய முகவரியில் நீங்கள் வசிப்பவராக இருந்தால் அந்த முகவரியை உறுதிப்படுத்த வேண்டியிருக்கும்.

- வாக்காளர் இடாப்பில் உங்கள் முகவரியின் கீழ் உங்களுடைய பெயர் பதிவுசெய்யப்பட்டிருந்தால் பிரச்சினையில்லாமல் காரியம் முடிந்துவிடும். அல்லாதுவிடில், அடையாள அட்டையில் நீங்கள் குறிப்பிடும் முகவரியில் நீங்கள் வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கோரப்படலாம்.

- புதிய அடையாள அட்டையைப் பெறும் வரையில் பாவிப்பதற்கான ஆவணத்தை கிராம சேவகரிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.

- கிராமசேவகருடன் தொடர்ச்சியாகத் தொடர்பைப் பேணுவதன் மூலம் புதிய அடையாள அட்டையை விரைவில் பெற முயலுங்கள்.

**ஒரு நாள் சேவை**

ஒரே நாளில் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமானால், கிராமசேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, நீங்கள் வசிக்கும் பிரதேசத்தின் பிரதேச செயலகத்தில் காண்பித்துப் பதிவுசெய்த பின்னர், கொழும்பு ஜாவத்தை வீதியிலுள்ள ஒரு நாள் அடையாள அட்டை வழங்கும் செயலகத்தில் அவற்றைச் சமர்ப்பித்து ஒரே நாளில் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு 500 ரூபா கட்டணம் அறவிடப்படும்.

ஜாவத்தை வீதியும், கெப்பிட்டிப்பொல மாவத்தையும் சந்திக்கும் மூலையில் அமைந்துள்ள இந்த அலுவலகத்தில், புதிய அடையாள அட்டையைப் பெறுதல், பழையதைப் புதிப்பித்தல், தொலைந்துபோன அடையாள அட்டைக்குப் பதிலாக புதியதொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகிய மூன்று பணிகளையும் செய்துகொள்ளலாம். இவை ஒவ்வொன்றுக்குமென தனித்தனி கியூக்களில் சென்று காரியத்தை முடிக்கவேண்டியிருக்கும். தொலைந்த அடையாள அட்டைக்காகப் புதியதொன்றைப் பெறும் பணியில் சற்றுக் காலதாமதம் ஏற்படலாம்.

உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து, 500 ரூபா பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டையும் பெற்றுவிட்டால், மாலையில் சென்று உங்கள் பெயர் அழைக்கப்படும்போது புதிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும். உங்கள் அடையாள அட்டையிலுள்ள முகவரி, தொழில் ஆகியவற்றில் மாற்றம் செய்யவேண்டுமானால், அதற்குரிய ஆவணங்களை கிராமசேவையாளரிடம் சமர்ப்பித்து, கிராமசேவையாளரால் புதிய விபரங்கள் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை ஒரு நாள் சேவை அலுவலகத்தில் சமர்ப்பித்து மாற்றங்களைச் செய்துகொள்ளலாம். 20 வயதுக்கு உட்பட்டவர்கள் மாத்திரமே புதிய அடையாள அட்டையை ஒரே தினத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**தொடர்புகளுக்கு:**

***Registration of Persons Department***
*C 45, Kepettipola Mawatha, Colombo 05.*
*Telephone:2508022*

## தொழில் இல்லம்

JobsNet என்பது இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் தொழிலை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் ஒரு வலைப்பின்னல் அமைப்பாகும்.

நீங்கள் சுயமாக தொழில் தொடங்குவதற்கும், உங்கள் கல்வித் தகுதிக்குப் பொருத்தமான வேலைவாய்ப்பை உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் பெற்றுத் தருவதற்கும் JobsNet உதவி புரியும்.

அது மாத்திரமின்றி, தொழில் தேர்ச்சிப் பயிற்சிகளையும், நீங்கள் எதிர்பார்க்கும் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்களையும் JobsNet என்ற இந்தத் தொழில் இல்லத்தில் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

தொழில் இல்லத்தின் சேவையை கீழுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது, www.jobsnet.lk இணையத்தளத்தின் மூலமும் உங்களுக்குத் தேவையான சேவையைப் பெற்றுக்கொள்ளலாம்.

***JobsNet Headquarters***
*97, Jawatta Road, Colombo 05.*
*Telephone: 011 2559962, 011 5362642*

JobsNet

**பஸ் வழி:**

புறக்கோட்டையிலிருந்து 115, 173ஆம் இலக்க பஸ்கள். (*Identity Card Office* என்றே டிக்கட் பெறலாம்).

வெள்ளவத்தையிலிருந்து 154ஆம் இலக்க பஸ்ஸில் சென்று, ஜாவத்தை தரிப்பிடத்தில் இறங்கவும். (*Irrigation Department* - நீர் வழங்கல் அதிகார சபைக்கு அருகில்) *Jawatha Road* இல் 150 மீற்றர் தூரம் செல்ல வலது பக்கத்தில் எதிர்ப்படும் முதலாவது வீதி கெப்பிட்டிபொல மாவத்தையாகும்.


அனைத்து நிகழ்வுகளுக்கும் பொருத்தமான,
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பரந்த தெரிவுகள்...



GSS Cards

**SGS Cards.**
No. 4, Collingwood Place, Colombo 06.
Tel: 011 2361337 Fax: 011 2364334
Hotline: 0777 743334
Email: admin@sgscards.com
Web: www.sgscards.com

Wedding Invitations | Sweet Bags | Sweet Box | Visiting Card
All type of Printing works undertaken
The total Solution for Designing & Printing



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்குச்சந்தை முதலீடு
# Share Market Investment

சிறிய பங்குகளாக மூலதனத்தைப் பிரித்திருக்கும் கம்பனிகளில் பங்குகளை வைத்திருப்போர் அந்தக் கம்பனியின் பங்குதாரர்கள் என அழைக்கப்படுவர். கம்பனியின் அளவினையும் அதில் பங்குகளை வாங்கியுள்ள பங்குதாரர்களின் பணபலத்தையும் பொறுத்து, கம்பனியொன்றிற்கு இரண்டு தொடக்கம் பல இலட்சம் பேர் வரை பங்குதாரர்கள் இருக்கலாம்.

பொதுவாக ஒவ்வொன்றும் பத்து ரூபா கொண்ட குறிப்பிட்ட எண்ணிக்கையான பங்குகள் என கம்பனியின் பங்கு மூலதனமானது பிரிக்கப்பட்டிருப்பதனால், பங்குகளைக் கொள்வனவு செய்ய விரும்பும் ஒருவர் சில நூறு பங்குகளை சிறுமுதலீடாகவோ, பல தொகை பங்குகளை பாரிய முதலீடாகவோ வாங்க முடியும்.

பங்குதாரர்கள் தமது பங்குகளை விற்பதனையும், ஏனையோர் அதனை வாங்குவதனையும் வசதிப்படுத்துமொரு நிறுவனமாக பங்குச்சந்தை காணப்படுகின்றது. இலங்கையில் காணப்படும் பங்குச்சந்தை கொழும்பு பங்குச்சந்தை என அழைக்கப்படுகின்றது.

## எப்படி முதலிடலாம்?

பங்குச் சந்தையில் முதலீடு செய்ய விரும்புபவர்கள் முதலில் செய்ய வேண்டியது தமக்கென ஒரு பங்குத் தரகரினை தேர்ந்தெடுத்துக் கொள்வதாகும். இது தொடர்பில் வாங்குபவரும் விற்பவரும் குறிப்பிட்ட பங்குத் தரகருக்கு தரகொன்றினை வழங்குதல் வேண்டும். பங்குகளில் முதலீடு செய்த ஒருவருக்கு வருமானமானது இரண்டு வழிகளில் கிடைக்கும்.

- கம்பனியானது இலாபமீட்டும்போது அந்த இலாபத்தில் ஒரு பகுதியினை பங்குகளை வைத்திருப்பவர்களிற்கு பகிர்ந்தளிக்கும். இதனை பங்குலாபம் என அழைக்கின்றோம். இது பங்கின் முகவிலையின் குறிப்பிட்டதொரு வீதாசாரமாக வழங்கப்படும்.

- நிறுவனமானது இலாபகரமாக இயங்கும்போதும் எதிர்காலத்தில் நல்ல இலாபமடையக்கூடும் என எதிர்பார்க்கும்போதும் குறிப்பிட்ட நிறுவனத்தின் பங்குகளின் பங்குச்சந்தை விலையானது அதிகரித்துக் கொண்டு செல்லும். இதன் போது ஒருவர் தான் வாங்கிய விலையிலும் பார்க்கக் கூடுதலான விலைக்கு குறிப்பிட்ட பங்கினை விற்கக்கூடியதாக இருப்பதால், அவர் இலாபமொன்றை அடைவார். இது மூலதன இலாபம் எனப்படுகின்றது.

நிறுவனத்தின் பெறுபேறுகள் திருப்திகரமானதாக இல்லாதபோது குறிப்பிட்ட நிறுவன பங்குகளின் விலை குறைவடையும். இவ்வாறான நிலையில் ஒருவர் தான் கொள்வனவு செய்த விலையிலும் பார்க்க குறைந்ததொரு விலையில் பங்குகளை விற்க நேர்வதால், அவர் நட்டமடைவார். இதனையே மூலதன நட்டம் என அழைக்கின்றோம்.

பங்குகளில் முதலீடு செய்வது என்பது வியாபாரத்தில் முதலீடு செய்யும் ஒரு நடவடிக்கையாகும். அதில் இலாபமும் அடையமுடியும் நட்டமும் ஏற்படக்கூடும்.

எனவே பங்குச் சந்தையில் முதலீடு செய்யும் ஒருவர் தனியே அவர் பங்குகளைக் கொள்வனவு செய்யவுள்ள நிறுவனத்தைப் பற்றி மட்டும் அறிந்து கொள்வதுடன் நின்று விடாது, பங்குச்சந்தையின் போக்கினையும் அது எதிர்காலத்தில் என்ன போக்கினைக் கொள்ளக்கூடும் எனவும் அறிந்து முதலீட்டை மேற்கொள்வதுடன், தொடர்ச்சியாக பங்குச்சந்தை நிலைமைகளை அவதானித்து சரியான தருணத்தில் பங்குகளை கொள்வனவு செய்யவும், அதே போல் சரியான தருணத்தில் அவற்றை விற்கக்கூடியவராகவும் இருக்கவேண்டும்.

கொழும்பில் வெளிவரும் ஆங்கில நாளிதழ்களான டெய்லி நியூஸ், டெய்லி மிறர், த ஐலண்ட், போன்ற பத்திரிகைகளில் முன்னய நாள் பங்குச்சந்தை நிலைவரம் வெளிவருகின்றன.

இதனைத்தவிர www.cse.lk, www.lbo.lk போன்ற இணையத் தளங்களில் கொழும்பு பங்குச்சந்தை நிலைவர மாற்றங்களை உடனுக்குடன் பார்க்கமுடியும்.

# வங்கிக் கணக்கு Bank Account

ஏதாவதொரு வங்கியில் உங்களுக்கென்று ஒரு கணக்கு உண்டா? இல்லையென்றால் உடனடியாகவே ஒரு வங்கியில் உங்கள் பெயரில் கணக்கொன்றை ஆரம்பியுங்கள். வங்கியொன்றில் கணக்கொன்றைப் பேணி, அதன் மூலம் உங்கள் பணத்தைக் கையாள்வதால் பலவித நன்மைகளை நீங்கள் அடைய முடியும். அப்படி என்னதான் நன்மை ஏற்படப்போகிறது?



- பணம் பாதுகாக்கப்படுகிறது.
- வட்டி அல்லது இலாபப் பகிர்வு.
- VISA மற்றும் ATM Card மூலம் வங்கியில் உள்ள பணத்தைக் கையாளவும், பணத்தைக் கையில் எடுத்துச்செல்லாமலே பொருள் கொள்வனவு செய்யவுமான வசதிகள்.
- வங்கிக் கடன், Credit Card வசதிகள்.

இவை மட்டுமல்ல, வங்கியொன்றில் கணக்கொன்றைப் பேணும்போது, வாடிக்கையாளர் என்ற வகையில், லிசிங், வீட்டுக்கடன் என அன்றாட வாழ்வின் உங்களுடைய பல்வேறு நிதித் தேவைகளுக்கும் வங்கி உங்களுக்குக் கைகொடுக்கும்.

எங்கே புறப்பட்டுவிட்டீர்கள்? வங்கிக்குத்தானே?


இலங்கையில் முதன்முறையாக 22கரட் தங்கமுலாம் போடப்பட்ட நகைகளுக்கென்று ஓர் தனியான (கவரிங்) நகையகம்.
22ct Gold Plated (Covering) Jewel Shop
කැරට් 22 රත්‍රං ආලේප කරන ලද ආභරණ

- தங்க நகைகளுக்கு நிகராக அணியக்கூடியவை
- உங்கள் பாதுகாப்பிற்கும், கௌரவத்திற்கும் உகந்தவை
- தேவைப்படும்போது மீண்டும் தங்கமுலாம் போட்டுப் பாவிக்கலாம்

Immitation அல்ல, மூன்று மாத கால உத்தரவாதம்

நியாயமான விலை
உத்தரவாதம்
இன்றே நாடுங்கள்!!!



வெள்ளவத்தையில்...
A.V.Jewels Mart
4C6-1/6, 1st Floor, Fussels Lane, Wellawatte, Colombo 06. Tel / Fax: 2559744
திங்கள் முதல் சனி வரை காலை 9.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை திறந்திருக்கும்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொடர்மாடியில் குடியிருப்போர் கவனிக்க வேண்டியவை...



- நீங்கள் குடியிருக்கும் பிரதேசத்தைப் பயன்படுத்துவது, பராமரிப்பது, அழகுபடுத்துவது போன்ற சகல உரிமையும், பொறுப்பும் உங்களுக்கு உண்டு. ஆனால், நீங்கள் குடியிருக்கும் பிரதேசத்துக்குள் மாற்றங்கள் செய்யவேண்டுமானால், அதற்கான அனுமதியை, அதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருப்பவர்களிடம் நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

- கட்டடம் அமைந்துள்ள காணி, கட்டடத்துக்கான உள் மற்றும் வெளிப் பாதைகள், மைதானம், பொதுவான வெளிப் பிரதேசங்கள் என்பன தொடர்மாடியில் குடியிருக்கும் எல்லோருக்கும் சொந்தமானதாகும். ஏனையோருக்கு இடையூறு விளைவிக்காத வகையில் இவற்றை நீங்கள் பயன்படுத்தவேண்டும்.

- நீங்கள் கொள்வனவு செய்த கட்டடத்துக்கு ஏதும் பங்கமேற்பட்டாலும், அது கட்டப்பட்ட நிலத்தின் ஒருபகுதி உங்களுக்கு உரித்தாகும்.


- ஏனையோருக்கு இடைஞ்சலை ஏற்படுத்தும் வகையில் செல்லப் பிராணிகளை வளர்க்கக்கூடாது.

- உங்கள் வசிப்பிடத்தை தொடர்மாடி முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள் தேவையானபோது பார்வையிடுவதற்கு அனுமதிக்கவேண்டும்.


## தொடர் மாடி மனைகள் விற்பனைக்கு...

*for more information of Real Estate log on:* www. INL .com

| Company | Site Address | Available Units 2B.R. | 3B.R. | 4B.R. | Contact Number |
|---|---|---|---|---|---|
| **Hessonite Property Developers (Pvt) Ltd.** No. 7-5/2A, Orchard Building, Galle Road, Colombo 06. | No. 24, Rohini Road, Colombo 06. | ... | 5 | ... | 0777780806 0777368743 |
| | No. 30, Vanderwert Place, Dehiwela. | 6 | 4 | ... | |
| **Provisix International (Pvt) Ltd.** No. 6, IBC Road, Colombo 06. | No. 6, IBC Road, Wellawatte, Colombo 06. | 2 | 6 | ... | 0714528484 |
| **Metro Housing Construction (Pvt) Ltd.** 379, 2/2, Galle Road, Colombo 06. | No. 4, Ramakrishna Road, Colombo 06. | ... | ... | 8 | 0714858296 0777271467 0777306304 |
| | No. 10, 37th Lane, Colombo 06. | ... | 6 | ... | |
| | No. 51, 37th Lane, Colombo 06. | ... | 9 | ... | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# Medical Insurance

விபத்து உட்பட்ட 20 வகையான நோய்களுக்கான Medical Insurance இன்று பல்வேறு காப்புறுதி நிறுவனங்களால் வழங்கப் படுகின்றன.

உள்நாட்டில் மட்டுல்ல, வெளிநாட்டுப் பயணங்களின்போது கூட விபத்து மற்றும் எதிர்பாராத உடல் உபாதைகள் ஏற்படும்போது உங் களிடமுள்ள Medical Insurance அட்டையைக் காண்பித்து காப்புறுதி நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ள எந்தவொரு தனியார் மருத் துவமனையிலும் தங்கி நீங்கள் சிகிச்சை பெறலாம். நீங்கள் பெற் றிருக்கும் காப்புறுதி வகையைப் பொறுத்து உங்களுக்கு ஆகும் வைத்தியச் செலவு முழுவதையும், அல்லது அதன் 75% தினை காப் புறுதி நிறுவனம் பொறுப்பேற்கும்.

ஒரு குடும்பத்தில் கணவன் மாத்திரம் Medical Insurance செய்திருந் தால், அவரது குடும்ப அங்கத்தவர்களான மனைவி மற்றும் இரண் டு பிள்ளைகளும் நன்மைகளை அநுபவிக்கலாம்.

இது தவிர, உத்தியோகத்தரல்லாத தனி நபர்களுக்கான Medical Insurance திட்டங்களும் நடைமுறையில் உள்ளன. Medical Insurance இனை வழங்கும் காப்புறுதி நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு உங்களுக்குப் பொருத்தமான Medical Insurance பற்றி அறியுங்கள்.

தொடர்புகளுக்கு:

**CEYLINCO INSURANCE CO.LTD**
*Ceylinco House, 69, Janadhipathi Mawatha, Colombo 01.*
*Tel: 011 2485757 or 011 2485758*

**SRI LANKA INSURANCE**
*"Rakshana Mandiraya", 21, Vauxhall Street, Colombo 02.*
*Tel: 011 2325311-6 or 011 2435301-4*

**EAGLE INSURANCE**
*Head Office, Eagle House, 75, Kumaran Ratnam Road, Colombo 02.*
*Tel: 011 2310300 or 011 2310000*

**JANASHAKTHI INSURANCE COMPANY LTD.**
*47, Muttiah Road, Colombo 02. Tel: 011 2309810*

*for information on Insurance log on:*
www. .com

## AMBULANCE

**St. John Ambulance** Tel: 2433756


**Ambulance Station** Tel: 2422222

**Port Medical Centre** Tel: 2420428

**Red Cross society**
Tel: 2694487, 2691095, 2695434

**A.F.Raymonds & Co.** Tel: 2693737

**General Hospital Ambulance**
Tel: 2691111




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

A Great Opportunity to do Personalised Marketing
வீட்டுக்கு வீடு உங்கள் வர்த்தகத்தை எடுத்துச்செல்ல அரிய வாய்ப்பு

# Nock The Door Touch The Heart
## வாசல்களைத் தட்டி இதயங்களைத் தொடுங்கள்



Take your Business to the doorsteps of the Potential Customers Through EC Life

Issued freely from Wattala to Ratmalana

**Door to Door delivery in Wellawatte area**

Make people to think about you first. Whenever a need arise

வத்தளை முதல் இரத்மலானை வரை இலவசமாக விநியோகிக்கப்படும் EC Life சஞ்சிகை மூலம் வாடிக்கையாளர்களின் வீட்டு வாசல்களுக்கே உங்கள் வியாபார நடவடிக்கைகளை எடுத்துச்செல்லுங்கள்!

**வெள்ளவத்தையில் வீட்டுக்கு வீடு விநியோகம்**

அடுத்த முறை தேவை வரும்போது உங்களைப் பற்றி முதலில் சிந்திக்கச் செய்யுங்கள்

Convey the right message, in the right way, to the right people
சரியான தகவலை, சரியான வழியில், சரியான மக்களுக்குத் தெரிவியுங்கள்
இந்த அரிய வாய்ப்பை உங்கள் வாசலுக்கே வரவழைக்க
Just Dial 077 3616798
Get this opportunity at your doorstep

EC LIFE
Make Life Easy

- One and only
- Free
- Directory cum Magazine

Published in Sri Lanka

## EC Life Magazine Advertisement Size and Rates


| Page | Normal Rates | Special Rates 30% Discount |
|---|---|---|
| Inner Page(Full) | Rs. 35,000 | Rs. 24,500.00 |
| Inner Back Cover | Rs. 45,000 | Rs. 31,500.00 |
| Inner Front Cover | Rs. 50,000 | Rs. 35,000.00 |
| Back Cover | Rs. 55,000 | Rs. 38,500.00 |
| Inner Pages ½ (H) | Rs. 20,000 | Rs. 14,000.00 |
| Inner Pages ¼ (H) | Rs. 12,500 | Rs. 8,750.00 |
| Inner Pages ½ (V) | Rs. 20,000 | Rs. 14,000.00 |
| Inner Pages ¼ (V) | Rs. 12,500 | Rs. 8,750.00 |
| Inner Pages ¼ (V) | Rs. 12,500 | Rs. 8,750.00 |
| Inner Pages 1/8 (H) | Rs. 7,000 | Rs. 4,900.00 |

Free Web Promotion on inllanka.com

For Hit Adds
Free of charge for 15 Words

Hotline: 0773616798

Making Life Easy through Effective Communication of Information



# EC Ways இன் சர்வதேச வர்த்தக விளம்பர சேவை...
International Advertising Service

ஐக்கிய இராச்சியம், கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் முன்னணி ஊடகங்களினூடாக உங்கள் வர்த்தகத்தை அங்கு விஸ்தரியுங்கள்.

Promote Your Business in UK, Canada & other European Countries Through Prominent Media Outlets of those Countries

For Advertising Arrangements:
EC Ways (Pvt) Ltd.
No.4, IBC Road, Colombo-06.
Tel: +94 (0) 11 5673483 Fax: +94 (0) 11 2506614
Email: info@ecways.com

- Tamil Pages
- ஒரு பேப்பர்
- ஒரு ரேடியோ
- உதயசூரியன்
- Theepam TV
- Canada Thamilosai
- Australia Inbath Thamil Oli


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Total Media Solutions Under One Roof

ஒரே கூரையின் கீழ்
சகலவிதமான அச்சு, இலத்திரனியல், இணைய ஊடகப் பணிகள்

### Web Publishing & Software Development

Web Designing
Software Development
& IT Solutions

### Book Publishing

Typesetting
Pagination & Layout Design
Graphic Designing
Printing Works

News Letters - Annual Reports Periodicals - Magazines - Books






### Audio Visual Presentations

Demonstrate your Business Products through Short Audio Visual Presentations

Visual Demonstrations
Audio Video Documentaries
Short Film Production

### International Advertising

Popular Magazines
Business Directories
Radio & TV Channels

ECWAYS
Effective Communication ways

**No.4, IBC Road,
Colombo 06
T.P.: +94 (0) 11 5673483
Fax: +94 (0) 11 2506614
Email: info@ecways.com
Web: www.ecways.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org